# பிரத்தியேக அறிவித்தல்

**உங்கள் பிரத்தியேக தரவுகளைப் பற்றி நாங்கள் அக்கறைப்படுகின்றோம்.**

அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் மற்றும் அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் ஆகியவை அலியான்ஸ் லங்கா என அழைக்கப்படும் ஆயுள் - அற்ற மற்றும் ஆயுள் காப்புறுதி நிறுவனங்களாவதுடன் அவை இலங்கையில் ஆயுள் - அற்ற மற்றும் ஆயுள் காப்புறுதி செயற்பாடுகளில் ஈடுபட அனுமதி பெற்ற அலியான்ஸ் SE இன் முழு உரித்துப் பெற்ற உப நிறுவனங்களாகும். உங்கள் தனித்துவத்தை பாதுகாப்பதே எங்கள் முதல் தர கடமையாகும். இந்த பிரத்தியேக அறிவித்தலானது, ஒரு நபரிடமிருந்து எவ்வாறான தகவல்கள் சேகரிக்கின்றது, ஏன் அவ்வாறான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன மற்றும் அவை யாருக்கு வழங்கப்படுகின்றது அவை யாருடன் பகிரப்படுகின்றது என்பது தொடர்பிலான தகவல்களை வழங்குகின்றது. தயவுசெய்து இந்த அறிவித்தலை கவனமாக வாசிக்கவும்.

**1. தரவுகளின் பொறுப்பாளர் யார்?**

தரவுகளின் பொறுப்பாளர் என்பவர் யாரொருவர் பெறப்பட்ட தரவுகளை காகித முறையில் அல்லது மிண்ணனு கோப்புகளில் முறையே வைத்திருக்கவும் அவற்றை உபயோகப்படுத்தவும் தகுதிப்பெற்ற தனி நபர் அல்லது சட்டப்படியான நபராவார். தொடர்புடைய தரவு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளால் வரையறுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் மற்றும் அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் ஆகியவை தரவு கட்டுப்பாட்டாளர்களாவர். (பொறுப்பாளர்கள்)

**2. எவ்வாறான பிரத்தியேக தகவல்களை சேகரிக்கப்படுகின்றது?**

கீழ்காணும் வகையில் வெவ்வேறான தகவல்களை உங்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றோம்.

- முழுப்பெயர்
- முகவரி
- பிறந்த திகதி
- பால்
- தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு விபரம்
- தொலைபேசி இலக்கம்
- மின்னஞ்சல் முகவரி
- கல்விசார் மற்றும் தொழில் அனுபவங்கள் மற்றும் தொடர்புகள்
- வர்த்தக செயற்பாடுகள்
- போக்குவரத்து மற்றும் செலவுகள் விபரம்

- நிதி விபரங்கள் (உதா: வரவு / செலவு அட்டை மற்றும் வங்கி கணக்கு விபரங்கள் ஏனையவை)
- அடையாளத்தை உறுதிப்படுத்தும் மற்றும் பிண்ணனி ஆய்வுகள்
- ஏனைய விபரங்கள் (உதா: குடும்பம், வாழ்க்கை முறை, சமூக சூழ்நிலைகள் ஏனையவை)

நாங்கள் உங்களிடமிருந்து சில ‘‘உணர்ச்சிப் பூரவ்மான பிரத்தியேக தகவல்கள்’’ பெற்றுக் கொள்கின்றோம். உதாரணமாக மருத்துவ அறிக்கைகள் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள், உங்கள் முந்தைய உரிமைக் கோரல்கள், வரலாறு, ஏனைய குற்றவியல் சம்பந்தங்கள் உங்கள் மரபணு அல்லது உயிர்புள்ளியியல் தகவல்கள் பெறப்படுகின்றன.

**3. உங்களிடமிருந்து எவ்வாறு தகவல்கள் பெறப்பட்டு அவை எவ்வாறு உபயோகப் படுத்தப்படுகின்றது?**

எமது நியாயமான நலன்களை அடிப்படையாகக் கொண்டு மற்றும் / அல்லது எங்கள் ஏனைய எங்கள் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் உங்கள் பிரத்தியேக தகவல்களை நாங்கள் சேகரித்து உபயோகப்படுத்துவோம்.

- காப்புறுதி ஒப்பந்த நிர்வாகம்
- கடன் மீட்டெடுப்புகளை நிர்வாகிக்க
- அலியான்ஸின் தொழிநுட்ப நிர்வாகம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி பொருட்டு
- வாடிக்கையாளர் மற்றும் பயனர் நிர்வாகம் மற்றும் சந்தைப்படுத்தல்
- வர்த்தக உறவுகளை பேணுவதற்கு
- எங்கள் வர்த்தக உறவுகள் தொடர்பாக ஆய்வுகளை மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்த
- எமது அலியான்ஸ் வலைத்தளத்திற்கு நுழையும் போது அல்லது எங்கள் செய்தி மடல் அல்லது அஞ்சல் பட்டியல்களுக்கு நீங்கள் சப்ஸ்க்ரைப் செய்யும் போது எங்களை பற்றிய விபரங்கள், எங்கள் தயாரிப்புக்கள், சேவைகள் மற்றும் எங்கள் நிகழ்வுகள் ஆகியவற்றை அறிவிக்க
- பாதுகாப்பு விதிகள், பொது நிறுவன தேவைபாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்ட மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் வசதியாக்கல் செய்வதற்கு
- மோசடிகளை தவிர்ப்பதற்கும் மற்றும் நிராகரிப்பதற்கு
- எந்தவொரு சட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கிய வகையில் செயற்படுவதற்கு (உதா: வரி, கணக்கீடு மற்றும் நிர்வாக கடமைகள்

மேலே சுட்டிக்காட்டப்பட்ட நோக்கங்களுக்காக பொதுவான மற்றும் வர்த்தக தரவுகளிலிருந்து உங்களைப் பற்றியதான பெற்றுக்கொண்ட பிரத்தியேக தகவல்களை நாங்கள் செயன்முறையாக்குவோம்.

உங்களிடமிருந்து தரவுகளை பெற்றுக்கொள்வதற்கு எங்கு எப்போது உங்களுடைய ஒப்புதலை வழங்க வேண்டும் என்பதை நாங்கள் உங்களுக்கு அறிவிப்போம். அதை தவிர உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பிரத்தியேக தகவல்களை சட்டப்படியான வியாபார தேவைப்பாடுகளுக்கு முகங்கொடுப்பதற்கும் (குறிப்பாக வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை பேணுதல், அலியான்ஸ் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குதல், நிகழ்வுகளை முன்னெடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் சந்தை ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை செயற்படுத்தல்) அல்லது ஏனைய சட்ட ஏற்பாடுகளுடன் பொருந்தும் வகையில் ஒத்திசைவதற்கும் தரவுகளை செயற்படுத்துகின்றோம். மேலும், உங்களுடன் ஒரு ஒப்பந்தத்தில் உட்பிரவேசிக்க உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் செயலாக்கலாம் அல்லது உங்களுடன் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்கள் கடமைகளைச் செய்யலாம். அலியான்ஸ் பிரத்தியேக தரவுகளின் பாவனைக்காக சட்ட மற்றும் ஏற்பாடுகளின் அனுகூலங்கள் பெரிதும் மதிக்கின்றது.

## 4. யாருக்கு உங்களுடைய பிரத்தியேக தகவல்களை செயற்படுத்துவதற்கு அதிகாரம் உள்ளது?

உங்கள் பிரத்தியேக தரவுகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுடன் பொருந்தக்கூடிய வகையில் செயலாக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்கின்றோம்.

கூறப்பட்ட நோக்கங்களுக்காக, மூன்றாம் தரப்பு தரவுக் கட்டுப்பாட்டாளர்களாக செயல்படும் பின்வரும் தரப்பினர்களுக்கு உங்கள் பிரத்தியேக தரவுகள் வெளியிடப்படலாம்.

- பொது அதிகாரிகள், பிற அலியான்ஸ் குழு நிறுவனங்கள், பிற காப்பீட்டாளர்கள், இணை காப்பீட்டாளர்கள், மறு காப்பீட்டாளரைர்கள், காப்பீட்டு இடைத்தரகர்கள் / தரகர்கள் மற்றும் வங்கிகள்.

கூறப்பட்ட நோக்கங்களுக்காக எங்கள் அறிவுறுத்தலின் கீழ் தரவு செயற்பாட்டாளர்களாக செயல்படும் பின்வரும் தரப்பினர்களுடன் உங்கள் தனிப்பிட்ட தரவை நாங்கள் பகிர்ந்து கொள்ளலாம்.

- பிற அலியான்ஸ் குழு நிறுவனங்கள், தொழிநுட்ப ஆலோசகர்கள், நிபுணர்கள், வழக்கறிஞர்கள், இழப்பு சரிக்கட்டாளர்கள், திருத்துனர்கள், மருத்துவர்கள், மற்றும் வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சேவை நிறுவனங்கள் (உரிமைக் கோரல்கள், தகவல் தொழிநுட்பம், அஞ்சல், ஆவண முகாமைத்துவம்) : மற்றும்

- உள்ளூர் சட்டத்தின் கீழ் மற்றும் உங்கள் தகவல் தொடர்பு அபிலாஷைகளுக்கு அமைய சந்தைப்படுத்தல் தகவல்தொடர்புகளை உங்களுக்கு அனுப்பும் விளம்பரதாரர்கள் மற்றும் விளம்பர வலையமைப்புக்கள். உங்கள் அனுமதியின்றி உங்கள் தனிப்பட்ட தரவுகளை இணைக்கப்படாத மூன்றாம் தரப்பினரின் சொந்த சந்தைப்படுத்தல் பயன்பாட்டிற்காக நாங்கள் பகிர்ந்து கொள்ள மாட்டோம்.

இறுதியாக, பின்வரும் நிகழ்வுகளில் உங்கள் பிரத்தியேக தரவுகளை நாங்கள் பகிர்ந்துக்கொள்ள முடியும்.

- ஏதேனும் உண்மையான மீள் சீர்திருத்தம், பிரிவாக்கல், விற்பனை, கூட்டு வர்த்தகம், நிர்ணயங்கள், அறுதியாக்குவது அல்லது எமது வர்த்தகத்தின் பாகமொன்றை அல்லது முழுமையானவற்றிலிருந்து அகற்றுவது களஞ்சியங்கள் அல்லது சொத்துக்கள் (முற்றிலும் விளக்க முடியாத பாகங்கள் உள்ளடங்கியவையும்) மற்றும்

- நாங்கள் உங்களுக்கு வழங்கிய தயாரிப்புக்கள் மற்றும் சேவைகள் குறித்து முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் அது தொடர்பாக உங்கள் சட்டப்படியான நிவிர்த்திகளை மேற்கொள்ளலாம் குறிப்பாக சம்பந்தப்பட்ட குறை நிரப்பு அதிகாரயை சார முடியும்.

**5. எனது பிரத்தியேக தகவல்கள்கள் எங்கு செயலாக்கப்படுகின்றது?**

உங்கள் பிரத்தியேக தரவுகள் மேலே குறிப்பிட்டுள்ளதன் படி தரப்பினரால் தெரிந்துக் கொள்ள வேண்டிய அடிப்படையில் உலகளாவிய ரீதியில் செயலாக்கப்படலாம். ஒத்திசைவாகக்கூடிய தரவு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப இரகசியத்தன்டை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக ஒப்பந்த கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்படுவதை நாங்கள் உறுதிசெய்கின்றோம். அங்கிகாரம் இல்லாத தரப்பினர்களுக்கு உங்கள் பிரத்தியேக தரவுகளை நாங்கள் வெளியிட மாட்டோம்.

செயலாக்கத்திற்காக உங்கள் தனிப்பட்ட தரவை நாங்கள் EEA க்கு மாற்றும் போதெல்லாம் அலியான்ஸ் தனியுரிமை தரநிலை (அலியான்ஸ் BCR) என அழைக்கப்படும் அலியான்ஸ் அங்கீகரிக்கப்பட்ட பைண்டிங் கார்ப்பரேட் விதிகளின் அடிப்படையில் நாங்கள் அவ்வாறு செய்வோம், அவை தனிப்பட்ட தரவுகளுக்கு போதுமான பாதுகாப்பை ஏற்படுத்துகின்றன மற்றும் அனைத்து அலியான்ஸ் குழு நிறுவனங்களுக்கும் சட்டப் பூர்வமாக பிணைக்கப்படுகின்றன. அலியான்ஸ் BCR பொருந்தாத இடங்களில் உங்கள் தனிப்பட்ட தரவுகளை EEA க்கு மாற்றுவது தொடர்பாக இலங்கையில் நிலவுவதைப் போலவே போதுமான அளவிலான பாதுகாப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

**6. உங்கள் பிரத்தியேக தரவுகளை பொருத்தவரையில் உங்கள் உரிமைகள் என்ன?**

பொருந்தக்கூடிய சட்டம் மற்றும் ஒழுங்குமுறை மூலம் அனுமதிபக்கப்பட்டால் கீழ்காணும் உரிமைகள் உங்களுக்கு உண்டு.

- உங்களைப் பற்றிய உங்கள் பிரத்தியேக தரவை அணுகவும், தரவின் ஆரம்ப தோற்றம், செயலாக்கத்தின் நோக்கங்கள் மற்றும் முனைகள், தரவுக் கட்டுப்பாட்டாளர் (கள்) மற்றும் தரவு செயலி (கள்) மற்றும் தரவை வெளிப்படுத்தக்கூடிய தரப்பினர்களின் விபரங்களை அறியவும்,

- உங்கள் பிரத்தியேக தரவுகளை உங்கள் சம்மதத்துடன் செயலாக்கப்பட்ட எந்த நேரத்திலும் உங்கள் சம்மதத்தை திரும்பப் பெறுவதற்கு,
- உங்கள் பிரத்தியேக தரவுகளை எப்போதும் துல்லியமாக்குவதற்கும் அல்லது சரி செய்யவும்,
- மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உங்கள் பிரத்தியேக தரவுகள் இனி தேவைப்படாவிட்டால் எங்கள் பதிவுகளிலிருந்து நீக்குவதற்கு,
- சில சூழ்நிலைகளில் உங்கள் பிரத்தியேக தரவுகளின் செயலாக்கத்தை கட்டுப்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, உங்கள் தரவுகளை துல்லியத்தை சரிபார்க்கும் காலத்தில் குறித்த பிரத்தியேக தரவுகளின் துல்லியப்பாட்டை குறித்து நீங்கள் விவாதிக்க முடியும்.
- உங்களுக்காக அல்லது உங்கள் புதிய காப்பீட்டாளர்களுக்காக உங்கள் பிரத்தியேக தரவுகளை மின்னணு வடிவத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மற்றும்,
- எங்களுக்கோ / அல்லது தொடர்புடைய தரவு பாதுகாப்பு அதிகாரத்திற்கோ முறைப்பாட்டினை மேற்கொள்ள முடியும்.

**7. உங்கள் பிரத்தியேக தரவுகளை செயலாக்குவதை எவ்வாறு எதிர்க்க முடியும்?**

பொருந்தக்கூடிய சட்டம் அல்லது ஒழுங்குமுறை மூலம் அனுமதிக்கப்பட்டால், உங்கள் பிரத்தியேக தரவுகளை செயலாக்குவதை எதிர்க்க உங்களுக்கு உரிமை உண்டு அல்லது அவ்வாறு செயலாக்குவதை நிறுத்தச் சொல்ல முடியும். (நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்கு உட்பட). நீங்கள் குறித்த வேண்டுகோளை விடுத்தப் பின்னர் ஒத்திசைவாகும் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் உங்களுடைய பிரத்தியேக தரவுகளை செயலாக்குவதை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்ள மாட்டோம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் பிற உரிமைகளைப் போலவே இந்த உரிமையையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

**8. எவ்வளவு காலம் நாங்கள் உங்கள் பிரத்தியேக தரவுகளை வைத்திருப்போம்?**

தரவு சேகரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அல்லது சட்டப்பூர்வமான கடமைகளை நிறைவேற்ற தேவையான அளவு மட்டுமே உங்கள் தனிப்பட்ட தரவை வைத்திருக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

உங்கள் பிரத்தியேன தரவுகளை தேவையானதை விட அதிக காலம் நாங்கள் வைத்திருக்க மாட்டோம். இது பெறப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே நாங்கள் அவற்றை வைத்திருப்போம்.

## 9. எங்களை எவ்வாறு நீங்கள் தொடர்புக் கொள்வீர்கள்?

நாங்கள் எவ்வாறு உங்கள் தரவுகளை செயலாக்குகின்றோம் என்பது குறித்து ஏதேனும் குறைபாடுகள் அல்லது விசாரணைகள் இருப்பின், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக எங்களை தொடர்புக் கொள்ள முடியும்.

அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் / அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்
தரவு பாதுகாப்பு அதிகாரி
சட்ட மற்றும் உடன்பாட்டு திணைக்களம்
இல. 675, டாக். டனிஸ்டர் த சில்வா மாவத்தை,
கொழும்பு 9, இலங்கை
0112 132 008
privacy@allianz.lk

## 10. இந்த பிரத்தியேக அறிவித்தலை எத்தனை தடவை புதுப்பிப்பீர்கள்?

இந்த பிரத்தியேக அறிவித்தலை நாங்கள் வழமையாக மதிப்பாய்வு செய்கின்றோம். உங்களை பாதிக்கக் கூடிய மாற்றங்கள் ஏதேனும் நிலவுமாயின் அதை உங்களுக்கு நாங்கள் நேரடியாக அறிவிப்போம்.